# எலெக்ட்ரிக் ரோஜாக்கள்!

## - ராஜேஷ்குமார் -

## 1

ரயில்வே ஸ்டேஷனின் வெளிச்சமான பிளாட்பாரத்திலிருந்து வெளியே வந்தார்கள் மீராவும் கல்பகாவும். இரண்டு பேரின் முதுகுகளிலும் ஏர் பேக்குகள் திம்மென்று ஏறியிருந்தன.

"டயம் எவ்வளவு மீரா?" - கேட்ட கல்பகா, வளப்பமாய், உயரமாய் இருந்தாள். மாநிறத்துக்கும் கொஞ்சம் கூடுதலான நிறம், முகத்தில் கண்கள் கூடுதல் மார்க் வாங்கியிருக்க, பல் வரிசையில் கொஞ்சம் தவறியிருந்தாள். நீலப் பூக்கள் இறைத்த மெஜந்தா நிற சூடிதார், உயர்த்திப் போட்ட கொண்டை, கழுத்தில் மெலிதாய் ஒரு தங்கச் சங்கிலி, வலது கையில் ஒரு ஒற்றைத் தங்க வளையல், இடது கையில் செவ்வக வில்லையாய் சிட்டிஸன் வாட்ச்.

"ஏண்டி உன்னோட வாட்ச்சுக்கு என்னாச்சு...?" - கேட்ட மீராவுக்கு நிஜமாகவே ரோஜா நிறம்: ஒடிசலான தேகவாகு என்றாலும் - உடம்பில் எந்தெந்த இடங்களில் புஷ்டியைக் காட்ட வேண்டுமோ... அந்தந்த இடங்களில் நன்றாகவே தேறியிருந்தாள். மூக்கில் பொட்டுத் தங்கம் மூக்குத்தியாய் மாறியிருக்க, காதுகளில் பொன் வளையங்கள் ஆடின. இவளும் சூடிதாரில் புகுந்திருந்தாள். கறுப்பில் மஞ்சள் வரிகள் ஓடிய சூரிதார். வலது கையில் வெள்ளி வளையம். இடது கையில் எச்.எம்.டி. குவார்ட்ஸ்.

"என்னோட வாட்ச்சில் ஸெல் காலாவதி ஆயிடுச்சு... மீரா... ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே நின்னிருக்கு..."

"மணி இப்போ பத்தரை..."

"ஹோட்டலுக்கு நாம குடுத்திருந்த தந்தி கிடைச்சிருக்குமா...?"

"கிடைச்சிருக்கும்..."

"ரூம் கிடைக்கலைன்னா என்ன பண்றது...?"

"எப்படியாவது பேசி, ரூமை வாங்க வேண்டியதுதான். இந்த ராத்திரி நேரத்துல ரெண்டு கன்னிப் பெண்கள் மோசமான ஹோட்டல்கள்ல போய்த் தங்க முடியுமான்னு சத்தம் போட வேண்டியதுதான்..."

கல்பகா சிரித்தாள்.

"ஏண்டி சிரிக்கிறே?"

"நாமென்ன கன்னிப் பெண்களா?? எத்தினி வாட்டி...?"

"சரி... சரி... ஸ்டேஷன்ல வர்றவன் போறவனெல்லாம்... உன்னையும் என்னையுமே விழுங்கற மாதிரி பார்த்துட்டு போறான். மொதல்ல ஒரு டாக்ஸியைப் பேசு... ஹோட்டலுக்குப் போய் சேர்வோம்..."

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தார்கள்.

"மழை வேற வரும் போலிருக்கே...!"

டாக்ஸி ஸ்டாண்ட்டை நெருங்கினார்கள். மாலை முரசு படித்துக் கொண்டிருந்த ஒரு டிரைவர் ஓடி வந்தார்.

"எங்கேம்மா போகணும்?"

"ஹோட்டல் கனிஷ்கா..."

"போலாம்மா... உட்கார்ங்க..." - டாக்ஸியின் பின் சீட்டைத் திறந்து விட்டார் டிரைவர். கல்பகாவும் மீராவும் டாக்ஸிக்குள் போனார்கள். டாக்ஸி புறப்பட்டது.

டாக்ஸி வேகம் எடுத்து, ஹெட் குவார்ட்டரஸ் ரோட்டைத் தாண்டுவதற்குள் - முன்புறக் கண்ணாடியின் மேல் - முதல் மழைத் துளி வேகமாய் முத்தமிட்டது.

"மழை வந்தே வந்துடுச்சு..." - சொன்ன மீராவும், கல்பகாவும் கதவுக் கண்ணாடிகளை மேலே ஏற்றினார்கள்.

டாக்ஸி ப்ருக் பாண்ட் ரோட்டுக்குள் நுழைந்த போது - மழையின் கோபம் அதிகமாயிற்று.

"சே! செம மழை!"

கல்பகா மார்புக்குக் குறுக்காக கைகளைக்



கட்டிக்கொண்டு - குளிரைத் தாஜா செய்தபடி - மீராவின் உடம்போடு ஒட்டி உட்கார்ந்தாள். மீரா கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

"என்ன... வில்லியம்ஸோட ஞாபகம் வந்துடுச்சா...?"

"ச்சீ! சனியனே!"

"பின்னே ஏண்டி ஒண்டறே...?"

"குளிர்...!"

"எனக்கும்தான் குளிர்... ஆமா... வில்லியம் ஸுக்கும் உனக்கும் என்ன தகராறு? அவர் முன்ன மாதிரி ஏன் உன்னைப் பார்க்க வர்றதில்லை?"

"காரணம்... நிஜமா உனக்குத் தெரியாது...?"

"தெரியாது..."

"சரி... ஹோட்டலுக்குப் போய்ச் சொல்றேன். இப்ப வாயை மூடிக்கிட்டு வா..." கல்பகா அடிக்குரலில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே - டாக்ஸி - சிந்தாமணி சென்ட்ரல் தியேட்டரைக் கடந்து - வாலி ரோட்டில் நுழைந்தது.

தொலைவில் மரங்களுக்கு மத்தியில் - இருட்டின் பின்னணியில் 'ஹோட்டல் கனிஷ்கா' வெல்வெட் பச்சை நிற நியான் எழுத்துக்கள் மழையில் நனைந்து தெரிந்தது. நிமிஷ ஓட்டத்திற்குப் பின்னால் 'திடும்'மென்று எதிர்ப்பட்ட நெட்டுக்குத்தலான ஹோட்டல் கனிஷ்காவைத் தரிசித்து - காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து கார் பார்க்கிங்கில் நின்றது.

கல்பகாவும் மீராவும் இறங்கினார்கள்.

டிரைவர் கேட்ட பணத்தைக் கொடுத்துவிட்டு - போர்டிகோ டிகளில் ஏறி - கண்ணாடிக் கதவைத் திறந்து கொண்டு - ரிசப்ஷனுக்குள் நுழைந்தார்கள்.

கௌண்டரில் 'டை' கட்டி - கொஞ்சம் இள வயசு கமல் மாதிரித் தெரிந்த அந்த இளைஞனை நெருங்கினார்கள்.

அவன், "ஹலோ... வெல்கம்..." என்றான்.

கல்பகா சொன்னாள். "திருவனந்தபுரத்திலிருந்து வருகிறோம்... ரூம் ரிசர்வ் பண்ணச் சொல்லி ஒரு டெலிகிராம் கொடுத்திருந்தோம்..."

"நேம்?"

"கல்பகா!"

"எஸ்... ஐ... ரிமெம்பர்ட்... ஒரு டபுள் ரூம் - நான் ஏ.ஸி. கேட்டிருந்தீர்கள்..."

"எஸ்..." என்று மீரா தலையாட்ட - அவன் லெட்ஜரைப் பிரித்து வைத்துக் கொண்டான்.

"எத்தனை நாள் தங்கப் போறீங்க?"

"இரண்டு நாள்...!"

"அட்ரஸ்...!"

"எம். கல்கா, நெம்பர் பைவ், செயின்ட் ஜோசப் சர்ச் ரோடு, த்ரிவேண்ட்ரம்..."

"அட்வான்ஸ் தௌஸண்ட் ருபீஸ்..."

பணத்தைக் கொடுத்து - ரசீதை வாங்கிக் கொண்டார்கள். பேரர் சாவியோடு - வழிகாட்டி, லிப்டிற்குக் கூட்டி வந்து - மூன்றாவது மாடிக்கு உயர்ந்தான். மூன்றாவது மாடியில் லிப்டின் கதவுகள்



திறக்க - மொசைக் வராந்தாவில் நடந்து - 302ம் நெம்பர் அறைக்கு முன்பாய் வந்து நின்றார்கள். பேரர் கதவைத் திறந்துவிட, உள்ளே போய் - முதுகுச் சுமைகளை இறக்கி வைத்து - ஃபோமில் உட்கார்ந்தார்கள்.

பேரர் கேட்டான். "ஏதாவது ஈப்பிடறீங்களாம்மா?"

"இந்நேரத்துக்கு என்ன கிடைக்கும்?" கல்பகா கேட்டாள்.

"டின்னர் பிளேட்... சப்பாத்தி..."

"ரெண்டு டின்னர் பிளேட்..."

"சூப்... அயிட்டம்...?"

"வேண்டாம்!"

பேரர் தலையாட்டிவிட்டு வெளியேற - மீரா எழுந்து போய் கதவைச் சாத்தித் தாழிட்டுவிட்டு வந்தாள். கல்பகா அவசரக் குரலில் கேட்டாள்.

"என்ன மீர... கீழே நான் ரிசப்ஷனிஸ்ட்கிட்டே பேசிட்டிருக்கும்போது கஸ்டமர்ஸ் சார்ட்டை பார்த்தியா?"

"பார்த்தேன்..."

"நமக்குக் கிடைச்ச தகவல் சரிதானா?"

"சரிதான்..."

"ஆள் எந்த ரூம்ல தங்கியிருக்கார்?"

"509..."

"அப்போ ஐந்தாவது மாடி..."

"ஆமா..."

"சார்ட்ல என்ன பேர் இருந்தது?"

"தமிழ்ச் செல்வன்..."

"இப்போ மணி எவ்வளவு?"

"பதினொண்ணு..."

"ரெண்டு மணிக்குள்ளே தமிழ்ச் செல்வனை அமரர் போஸ்ட்டுக்கு பிரமோட் பண்ணனும்... முடியுமா?"

"கண்டிப்பா முடியும்! டின்னர் பிளேட் வர்றதுக்குள்ளே - நான் குளிச்சிட்டு வந்துடறேன்..." சொன்ன மீரா, சூடிதாரைத் தன் உடம்பினின்றும் உருவி ஃபோமின் மேல் எறிந்துவிட்டு - பிராவும் பெட்டிக்கோட்டுமாய் பாத்ரூமுக்குள் நுழைந்தாள்.

அதே விநாடி -

டீபாயின் மேலிருந்த டெலிபோன் தன் அலறலை ஆரம்பிக்க, கல்பகா கை நீட்டி ரிஸீவரை எடுத்தாள். காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

ரிசப்ஷனிலிருந்து கூப்பிட்டார்கள். "மிஸ் மீரா... ஆர் மிஸ் கல்பகா?"

"நான் கல்பகா..."

"உங்களுக்கு மெட்ராஸிலிருந்து ட்ரங்கால்..."

"கொடுங்கள்..."

பதட்டமானாள் கல்பகா.

அரை நிமிஷ நேரம் கழித்து - ரிஸீவரில் அந்த கரகரப்பான குரல் வழிந்தது.

"பேசறது யாரு?"

"நான் கல்பகா ஸார்..."



"பிரமோஷன் என்னச்சு?"

"நாளைக்கு ஆர்டர் டைப்பாயிடும் ஸார்..."

"ஷ்யூர்...?"

"ஷ்யூர்... ஸார்..."

"ஓ...கே... பிரமோஷன் ஆர்டரைக் கொடுத்துட்டு - நேரா மெட்ராஸ் வந்துடுங்க... எம்.டி. ஒரு மீட்டிங் வெச்சிருக்கார். நீங்க ரெண்டு பேரும் அதுல கலந்துக்கணுமாம்..."

"வந்துடறோம் ஸார்..."

"மீரா என்ன பண்றா?"

"பாத்ரூம்ல இருக்கா..."

"சரி... வெச்சுடு..." - மறுமுனையில் ரிஸீவர் சாத்தப்பட - கல்பகாவும் ரிஸீவரை வைத்தாள். மீரா பாத்ரூமின் கதவைத் திறந்து - வெற்றுடம்பாய் எட்டிப் பார்த்தாள்.

"போன்ல யாரு... கல்பகா...?"

"நம்ம எஜமான்..."

## 2

சென்னை... ராத்திரி 11.10.

தீவுத்திடல் முழுவதும் ட்யூப் லைட்கள் ஒளிர்ந்து கொண்டிருக்க - அந்தக் கட்சி மாநாடு உச்சக்கட்டத்தில் இருந்தது. மாநாட்டுப் பந்தலின் கம்பங்களில் டெலிவிஷன் பெட்டிகள் கட்டப்பட்டு - கூட்ட நிகழ்ச்சிகள் சூடாய் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தன.

மாநாட்டின் தலைவர் மைக்கின் முன்பாக வந்து நின்றார். "அடுத்தபடியாக... நீங்களெல்லாம் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் - அமைச்சர், மாண்புமிகு சண்முகநேசன் அவர்கள் நம்மிடையே சிறப்பானதொரு சொற்பொழிவை நிகழ்த்துவார்கள்."

மாநாட்டுக் கூட்டம் பௌர்ணமிக் கடலாய் ஆர்ப்பரிக்க - மேடையில் நடுநாயகமாய் உட்கார்ந்திருந்த சண்முகநேசன் - தன் ஆறு மாத தொப்பையோடு எழுந்தார்.

அவர் மைக்கை நோக்கி நடந்தபோது - கூட்டம் மறுபடியும் ஆர்ப்பரித்தது.

"பெருமதிப்புக்குரிய மாநாட்டுத் தலைவர் அவர்களே! மாநாட்டுப் பொறுப்பாளர் அவர்களே... மற்றும் மேடையில் வீற்றிருக்கின்ற எனதருமை நண்பர்களே! நடுநிசியானாலும், நடுக்குகின்ற குளிரானாலும் - நான் என்ன பேசப் போகிறேன் என்பதைக் கேட்பதற்காக, பாசத்தோடு கூடியிருக்கின்ற கட்சியின் நாடி நரம்புகளாய் விளங்கும் தொண்டர்களே! உங்கள் யாவர்க்கும் என் பணிவான வணக்கம்..." - கைத்தட்டல் ஒருமுறை எழும்பி ஓய்ந்ததும் - சண்முகநேசன் தொடர்ந்தார்.

"நாம் ஆளுங்கட்சியாக இருந்தாலும் - மக்களிடத்தில் அளவுக்கதிகமான செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் - இன்றைக்கு இந்த மாநாட்டை கூட்ட வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறோம். உங்களுக்கெல்லாம் தெரியும்... சமீப காலமாகவே எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், நண்பர்களும் - பொறாமையுணர்ச்சி கொண்டு - பொற்காலமாம் இப்புனித ஆட்சியை பழித்துரைத்து வருகிறார்கள். நமக்கெல்லாம் தலைவர், நம்முடைய முதலமைச்சர், தாயைப் போல் சபலப் பரிந்து அன்பு செய்யும் நல்லமுத்து அவர்களின் மேல் ஊழல் குற்றச்சாட்டை சுமத்தி வருகிறார்கள். நல்லமுத்துவும், அவருடைய அமைச்சரவையைச் சேர்ந்தவர்களும் ஊழல் செய்து - கோடிக்கணக்கில் பணத்தைச் சேர்த்து விட்டார்களாம்.

எவ்வளவு அநியாயமான குற்றச்சாட்டு இது? இந்தக் குற்றச்சாட்டுகளை யார் சொல்கிறார்கள் தெரியுமா? ஏழைகளின் கண்ணீரை அறியாத பணக்கார முதலைகள், அவர்களின் உழைப்பில் உண்டு கொழுத்த உன்மத்தர்கள், அவர்கள் நம்மைத் தூற்றத் தூற்றத்தான் - மக்கள் இவர்களை விட்டு, தூரமாய்த் தள்ளிப் போகிறார்கள்."

மாநாட்டுப் பந்தலில் கைத்தட்டல் பிய்த்துக் கொண்டு போக - சண்முகநேசன் தொடர்ந்தார்.

"வருகிற மாதம் பதினைந்தாம் தேதி - எதிர்க்கட்சிகள் ஒன்று சேர்ந்து, ஒரு ஊழல் பட்டியலைத் தயாரித்துக் கவர்னர் மாளிகைக்கு ஊர்வலமாகக் கொண்டு போய்த் தரப் போகிறார்களாம்... பொய்யான குற்றச்சாட்டுகளுக்கு - ஊழல் வர்ணம் பூசி, கவர்னரின் கையில் கொடுத்து விட்டால் பிரளயம் நடந்து விடுமா என்ன? எதிர்க்கட்சி நண்பர்களே! உங்களையெல்லாம் அன்போடு எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளேன். பெற்ற தாயையே சந்தேகப்படும் ஈனப் பிறவிகள் நீங்கள். சகோதரிக்கும் தாரத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் நீங்கள். உங்களையெல்லாம்

கழுமரத்தில் ஏற்றினால் - அந்த மரம்கூட பட்டுப் போகும்."

மாநாட்டில் ஆரவாரம் கிளம்பியது.

சண்முகநேசன் தொடர்ந்தார். "எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் எத்திராஜுலு அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். நீங்களும் நானும் பால்ய கால நண்பர்கள். ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து - அமெரிக்கன் கல்லூரி வரைக்கும் ஒன்றாகப் படித்தோம். நீங்கள் யார், எப்படிப்பட்டவர் என்பது எனக்குத் தெரியும். தமிழ்நாட்டில் தொழிற்சாலை இல்லாத ஊர் கூட இருக்கலாம். ஆனால் உங்களுக்குச் சின்ன வீடு இல்லாத ஊரே கிடையாது."

சிரிப்பொலி மாநாட்டுப் பந்தலைத் தூக்கியது. சண்முகநேசன் ஒரு வாய் சோடாவை குடித்துவிட்டுத் தொடர்ந்தார்.

"நீங்க எம்.ஏ. பட்டம் வாங்கின லட்சணம் எனக்குத் தெரியும். ஊழல் என்னும் தாய்க்குப் பிறந்த நீங்களா... எங்கள் தங்கத் தலைவரைப் பற்றிப் பேசுவது? நீங்கள் புழுதி வாரித் தூற்றினால் - அந்தப் புழுதியிலேயே மூச்சுத் திணறி மாண்டு போவீர்கள். மக்கள், நீங்கள் பேசும் பொய்களை யெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். என்றைக்காவது ஒரு நாள் அவர்கள் பொங்கி எழுழுந்தால் - நீங்கள் காலடியில் மதிபடும் புழுக்களை விட மிகக் கேவலமாக மிதிக்கப் படுவீர்கள்."

கிட்டத்தட்ட இதே ரீதியில் ஏறக்குறைய ஒரு மணி நேரம் பேசி முடித்த சண்மகநேசன் - போர்த்தப்பட்ட துண்டுகளோடு - மேடையினின்றும் இறங்கியபோது பன்னிரெண்டு மணி. போலீஸ் வளையத்திற்குள் அமர்த்தலாய் நடந்தபடி - தொண்டர்களைப் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டே தன் ஏ.சி. காரை நோக்கிப் போனார்.

போலீஸ் அதிகாரி ஒருவர் கதவைத் திறந்துவிட - சண்முகநேசன், மறுபடியும் எல்லோரையும் பார்த்துக் கும்பிட்டுக்கொண்டே உள்ளே போனார்.

கார் புறப்பட்டது. இருபதடி தூரம் கூட கார் நகர்ந்திருக்காது. ஒரு உயர்தர போலீஸ் அதிகாரி வேகமான நடையில் வந்து காரை மறித்தார்.

டிரைவர் காரை நிறுத்த - அவர் காருக்குள் எட்டிப் பார்த்து - மற்றவர்களுக்குக் கேட்காத தொனியில் - மெல்லிய குரலில் சண்முகநேசனிடம் சொன்னார்.

"ஸார்... உங்களை சி. எம். உடனடியா அவரோட வீட்டுக்கு வரச் சொன்னார். இப்பத்தான் வயர்லஸ் மூலமா தகவல் வந்தது."

சண்முகநேசன் முகம் மாறினார்.

"சி.எம். என்ன விஷயம்ன்னு ஏதாவது சொன்னாரா?"

"ஒண்ணும் சொல்லலை ஸார்..."

"குமார்! காரை சி.எம். வீட்டுக்கு ஓட்டு..."

தன் அருகே உட்கார்ந்திருந்த பி.ஏ.விடம் திரும்பினார் சண்முகநேசன்.

"மணி பன்னிரெண்டாச்சு... இந்நேரத்துக்கு எதுக்காக சி.எம். கூப்பிடறார்... உன்னால ஏதாவது ஊகிக்க முடியுதா ஜெகத்ரட்சகன்?"

"தெரியலை ஸார்..."

"என்னோட ஃபோர்ட்போலியோவை மாத்துவாரோ என்னமோ?"

"அதுக்கு இப்போ அவசியமில்லையே ஸார்..."

"மனுஷன் கூப்பிடறார்ன்னு சொன்னாலே உதறலா இருக்கு. எந்த நேரத்துல எதைப் பேசுவாரோன்னு அடி வயித்துல ஒரு அவஸ்தை..."

கார் சென்னை நகர - போக்குவரத்து இல்லாத ரோடுகளைத் தேய்த்து - சி.எம். வீட்டுக்குள் நுழைந்தபோது நேரம் 12.15.

கதவைத் தள்ளிக்கொண்டு நுழைய - மேஜை விளக்குக்குப் பக்கத்தில் உட்கார்ந்து ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்த முதலமைச்சர் நல்லமுத்து நிமிர்ந்தார்.

ஐம்பது வயது நல்லமுத்து - ஒடிசலாய் - நரை கிராப்போடு - பொன் நிறத்தில் இருந்தார். வெள்ளி பிரேமிட்ட சாளேஸ்வரக் கண்ணாடி கண்களைக் கவ்வியிருந்தது. மெலிதான நீல் நிறத்தில் நைட் கவுன் தரித்திருந்தார்.

"வாங்க சண்முகநேசன்..."

"வணக்கமுங்க..." சண்முகநேசன் பாமரத்தனமாய்க் கைகளைக் குவித்தார்.

"வணக்கம்... உட்காருங்க..."

சண்முகநேசன் உட்கார்ந்தார். நல்லமுத்து கேட்டார் : "மாநாடெல்லாம் எப்படி?"

"அமர்க்களம் பண்ணிட்டோம். நீங்க மாநாட்டுல கலந்திருந்தா... கூட்டம் இன்னும் பிச்சுக்கிட்டு



போயிருக்கும்..."

"நீங்க மாநாட்டுல ரொம்பவும் காரமா பேசினீங்க போலிருக்கே... உணர்ச்சி வசப்பட்டு பேசறது ரொம்பவும் தப்புங்க. சண்முகநேசன், நீங்க ஒரு அமைச்சர். அந்தப் பதவியோட கண்ணியத்தைக் காப்பாத்தறதுக்காகவாவது கொஞ்சம் டீஸண்டா பேசியிருக்கலாம்..."

"அதில்லீங்க... எதிர்க்கட்சி ஆளுங்க ரொம்பவும் மோசமா... அதிலும் உங்களைப் பத்தி அவங்க மோசமாப் பேசும்போது - என்னால உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்க முடியாதுங்க..."

நல்லமுத்து சிரித்தார். "சரி... அதை விடுங்க... நான் இப்போ எதுக்காக உங்களைக் கூப்பிட்டேன்னு சொல்லிடறேன்..."

"சொல்லுங்க..."

நாற்காலியின் நுனிக்கு வந்தார் சண்முகநேசன்.

நல்லமுத்து குரலைத் தாழ்த்திக் கொண்டார். "எதிர்க்கட்சித் தலைவர் எத்திராஜுலு நம்ம அமைச்சரவை மேலே தரப் போகிற ஊழல் புகார்களை எப்படியாவது தடுத்து நிறுத்தியாகணும். சென்ட்ரல் கவர்மெண்ட்டுக்கும் - நமக்கும் - இப்போ அவ்வளவு சுமுகமான உறவு கிடையாது. இந்த ஊழல் புகார்களைப் பெரிசு பண்ணி - நம்ம ஆட்சியை டிஸ்மிஸ் பண்ணப் பார்த்தாலும் பார்ப்பாங்க..."

சண்முகநேசன் சிரித்தார். மெல்ல, "அப்படியெல்லாம் பண்ண மாட்டாங்க. மக்கள் நம்ம பக்கம் இருக்காங்க..."

"இப்படிச் சொல்லி நம்மளை நாமே ஏமாத்திக்க முடியாது சண்முகநேசன். மக்களையும் ரொம்ப நாளைக்கு நாம ஏமாத்த முடியாது. எனக்குக் கிடைச்ச தகவல்கள்படி எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில பேர் - நம்ம கட்சி ஆட்களைக் கடத்தவும் - சில பேரைத் தீர்த்துக் கட்டவும் ஏற்பாடு பண்ணியிருக்காங்க... ஊழலுக்கு ஆதாரமான ஃபைல்களைக் கைப்பற்றவும் முயற்சிகள் எடுத்திட்டிருக்காங்க..."

சண்முகநேசன் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

முதல்வர் தொடர்ந்தார். "இந்த இக்கட்டான நேரத்துல நாம ஜனங்களோட கவனத்தைத் திருப்பியாகணும்..."

"இதுக்குத்தானே மாநாட்டைப் போட்டோம்."

"மாநாட்டைப் போட்டது மக்களுக்காக இல்லை... கட்சிக்காரங்களுக்காக..."

"சரி... மக்களோட கவனத்தைத் திருப்ப என்ன பண்ணலாங்க?"

முதல்வர் புன்னகைத்துவிட்டுக் கேட்டார். "நா ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே...?"

"எ... எ... என்னங்க?"

"நீங்க மினிஸ்டர் போஸ்ட்டை ராஜினாமா பண்ணணும்..."

உட்கார்ந்திருந்த சண்முகநேசன் நெட்டுக் குத்தலாய் எழுந்து நின்றார். முகத்தில் மின்சாரம் பாய்ந்த மாதிரி உணர்ச்சி.



"உட்கார்ங்க சண்முகநேசன்... உங்க அதிர்ச்சி எனக்குப் புரியுது. இருந்தாலும் நம்ம ஆட்சி நிலைக்கிறதுக்காக - நாம சில காரியங்களைப் பண்ணியாகணும். நீங்க ராஜினாமா பண்ணினா நமக்கு ஜனங்களோட அனுதாபம் கிடைக்கும்."

"ராஜினாமாவுக்கு என்ன காரணத்தைச் சொல்ல முடியும்?"

"அருமையான ஒரு காரணம் இருக்கு. கூட்டுறவு சங்கங்களில் நடைபெறும் ஊழல்களைத் தடுக்க முயன்றேன். அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை. அதிகாரிகளின் போக்கைக் கண்டிக்கும் வகையில் நான் ராஜினாமா செய்கிறேன். கட்சியில் ஒரு தொண்டனாய் இருந்து, ஊழல்களை ஒழிக்கப் பாடுபடுவேன்னு நாளைக்கு ஒரு அறிக்கை விடுங்க... கூடவே ராஜினாமாவையும் சப்மிட் பண்ணிடுங்க..."

"சரிங்க..."

"இதெல்லாம் ஒரு செட்டப்தான் சண்முகநேசன். இந்த ஊழல் புகார் மகஜர், கவர்னர் மாளிகைக்கு ஊர்வலம் - இந்த அமளியெல்லாம் ஓயட்டும். மந்திரிசபையை ரீஅசம்பிள் பண்ணும்போது - உங்களுக்கு நல்ல ஃபோர்ட்போலியோ தர்றேன்..."

சண்முகநேசன் அழாக்குறையாகக் கேட்டார். "இந்த ராஜினாமா நாடகத்தை வேறு எந்த மந்திரியாவது பண்ணக்கூடாதா?"

முதல்வர் நல்லமுத்து எழுந்து வந்து - சண்முகநேசனின் தோளைத் தட்டிக் கொடுத்தார். "எனக்கு அடுத்தபடியா ஜனங்க மத்தியில நீங்கதான்

பாப்புலரா இருக்கீங்க - தொண்டர்கள் மத்தியிலேயும் உங்க மேலே நல்ல அபிமானம் இருக்கு... அதிகாரிகள் மேலே பழியைப் போட்டுட்டு நீங்க ராஜினாமா பண்ணினா... ஜனங்களோட அனுதாபம் நிச்சயமா உங்களுக்கும் கிடைக்கும்... நம்ம கட்சிக்கும் கிடைக்கும்..."

"நீங்க... எப்படி சொல்றீங்களோ... அப்படியே பண்ணிடறேன்..."

"மனசுல ஒண்ணும் வெச்சுக்காமே வீட்டுக்குப் போங்க. நாளைக்குக் காலையிலே பத்து மணிக்கு இங்கே வாங்க... நான் பிரஸ் ரிப்போர்ட்டர்களை வரவழைச்சு வெச்சுருக்கேன்... நீங்க வந்து ராஜினாமாவை அனௌன்ஸ் பண்ணிடுங்க..."

சண்முகநேசன் கைகளைக் குவித்துவிட்டு - முதல்வர் அறையினின்றும் வெளியே வந்தார். தளர்ந்த நடையோடு காரை நெருங்க - பி.ஏ. ஜெகத்ரட்சகன் காரின் கதவைத் திறந்து விட்டு - அவர் உள்ளே போனதும் தானும் உட்கார்ந்தார்.

கார் புறப்பட்டது.

காம்பௌண்ட் கேட்டைத் தாண்டும் வரை மௌனமாக இருந்த ஜெகத்ரட்சகன் கேட்டார். "ஏதாவது முக்கியமான செய்தியா ஸார்?"

"ஆமா..."

"நான் தெரிஞ்சுக்கலாமா ஸார்?"

"நாளைக்குக் காலையில் உங்களுக்குத் தெரியும்..."

தொடர்ந்து காரில் மௌனம்.



கார் கீழ்ப்பாக்கம் கார்டன் ரோட்டில் வேகம் குறைந்து திரும்பியபோது ஜெகத்ரட்சகன் கேட்டார். "ஸார்... நான்ங என் வீட்டுக்குப் போக, வழியிலேயே இறங்கிக்கலாமா? இல்லை... உங்க கூடவே வீட்டுக்கு வரணுமா?"

"நீங்க இறங்கிக்கலாம்... நாளைக்குக் காலையிலே எட்டு மணிக்கு வந்தாப் போதும். குமார்... காரை நியூ ஆவடி டாங்க் ரோட்ல நிறுத்து..."

"சரி ஸார்..."

கார் மேலும் இரண்டு நிமிஷங்களைப் பயணத்தில் கரைத்து, நியூ ஆவடி டாங்க் ரோட்டுக்கு வந்தது. சாலையில் திருப்பத்தில் திரும்பி நின்றது.

"ப்ளக்...!"

ஜெகத்ரட்சகன் காரின் கதவுக் கைப்பிடியைப் பற்றி கீழ் நோக்கித் தாழ்த்திய அதே விநாடி -

பின்பக்கம் அந்தச் சத்தம் கேட்டது.

"டட் டட் டட் டட்..."

ஒரு மோட்டார் பைக் பீறிட்டு வரும் சத்தம்.

ஜெகத்ரட்சகன் திரும்பிப் பார்த்த நிமிஷம் - பைக்கின் ஹெட் லைட் வெளிச்சம் - பின்பக்கக் கண்ணாடியில் பட்டு - கண் கூசியது.

"யாரவன்... இவ்வளவு வேகமா வர்றவன்?" - சண்முகநேசன் முனகிக் கொண்டிருக்கும்போதே -

அந்த பைக் பாய்ந்து வந்து கார் அருகே நின்றது.

பைக்கில் இரண்டு பேர். பில்லியனில் உட்கார்ந்திருந்தவனிடம் ஸ்டென் கன். திட்டினான். "ஏண்டா, மாநாட்டு மேடையில... மைக் கிடைச்சுட்டா...

என்ன வேணும்ன்னாலும் நீ பேசுவியா? எங்க கட்சித் தலைவரைப் பத்தி பேச உனக்கு என்னடா யோக்யதை இருக்கு? எச்சப் பொறுக்கி நாயி!"

சொல்லிக் கொண்டே - ஸ்டென் கன்னைத் தட்டிவிட்டான்.

"டட டட டட டட டட டட......" கண்மூடித்தனமாய்ச் சுட்டான்.

காரின் உடம்பு பூராவும் பொத்தல்கள் விழ - காருக்குள்ளேயே சண்முகநேசன், ஜெகத்ரட்சகன், டிரைவர் - மூன்று பேர்களின் ரத்தமும் சதையும் தாறுமாறாய்ச் சிதற ஆரம்பித்தது.

# 3

ஹோட்டல் கனிஷ்கா.

எல்லா அறைகளும் இருட்டில் விழுந்து - சுற்றுப்புறம் முழுவதும் மோசமான நிசப்தத்தில் இருக்க, கலபகாவும் - மீராவும் தங்களுடைய அறையினின்றும் வெளிப்பட்டார்கள். மீராவின் தோளில் ஒரு நீளமான ஜோல்னா பை தொங்கியது. கல்பகாவின் கையில் சின்னதாய் ஒரு ப்ரீப்கேஸ்.

லிப்ட்டை தவிர்த்துவிட்டு - மாடிப் படிகளில் சத்தம் வராமல் ஏறினார்கள். நான்காவது மாடி வராந்தாவுக்கு வந்ததும் - ஒரு நிமிஷம் நிதானித்து - சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஐந்தாவது மாடிக்கு உயர்ந்தார்கள்.

"ரூம் நம்பர் 509 தானே?"

"ஆமா... எத்தனை வாட்டி சொல்றது?"



வராந்தாவில் பூனை நடை நடந்து - அறை எண்களைப் பார்த்துக் கொண்டே போனார்கள். 505 - 506 - 507 - 508 - 509.

நின்றார்கள். பார்வைகளை ஒரு தரம் சுழற்றிவிட்டு - காலிங் பெல்லின் மேல் கையை வைத்தார்கள்.

"பிங்... பாங்..."

காத்திருந்தார்கள்.

அரை நிமிஷ நேரம் கழித்து -

நடுத்தர வயதில் - பனியன் லுங்கியோடு - தூக்கம் தொலைந்துபோன கண்களோடு அந்த நபர் நின்றிருந்தார். கல்பகாவையும் மீராவையும் பார்த்ததும் - நெற்றி அனிச்சையாய்ச் சுருங்கியது.

"எஸ்..."

"நீங்க... மிஸ்டர் தமிழ்ச் செல்வன்..." கல்பகா கேட்டாள்.

"ஆமா..."

"நாங்க எத்திராஜுலுகிட்டேயிருந்து வர்றோம். எம்பேர் கல்பகா. இவ மீரா..." அவர் விழிகளை விரித்தார்.

"தலைவர் எத்திராஜுலுகிட்டயிருந்தா?"

"ஆமா..."

"என்ன விஷயம்?"

"கதவுக்கு வெளியே நின்னுகிட்டு சொல்ற விஷயமில்லை..."

"ஸாரி... உள்ளே வாங்க..."

தமிழ்ச் செல்வன் கூட்டிக் கொண்டு போனார்.

இரண்டு பேர்க்கும் நாற்காலிகளைக் காட்டிவிட்டு, படுக்கையில் உட்கார்ந்தார். "என்ன விஷயம்?" மறுபடியும் ஆர்வம் தாளாமல் கேட்டார்.

"இந்தப் பணத்தை உங்களுக்கு குடுத்துட்டு வரச் சொன்னார்" - ப்ரீப்கேஸை எடுத்து நீட்டினாள் கல்பகா.

தமிழ்ச் செல்வன் ஆர்வமாய் வாங்கினார். பிரித்தார். உள்ளே நாசிக் கரன்ஸிகள். எல்லாமே நூறு ரூபாய் நோட்டுக் கற்றைகள்.

"எவ்வளவு?"

"ரெண்டு லட்சம்..."

"மெட்ராஸ் வரும்போது குடுத்திருக்கலாமே..."

"மெட்ராஸில் நிலைமை சரியில்லை. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், மந்திரிகளும் போலீஸ் உதவியோடு – எதிர்க்கட்சி நபர்களைத் தாக்குவதாக நியூஸ்... உங்களை மாதிரி இருக்கிற கவர்மெண்ட் ஆபீஸர்ஸையும் கண்காணிக்கறாங்களாம்... ஊழல் புகார்கள் சாட்சியங்களோடு கவர்னரின் கைக்கு போய்ச் சேரும் வரை நீங்க ஜாக்கிரதையா இருக்கணும்..."

"எத்திராஜுலு வேறு என்ன சொன்னார்?"

"பணத்தைக் குடுத்துட்டு நீங்க தர்றதை வாங்கிட்டு வரச் சொன்னார்."

"அக்ரோ சர்வீஸ்ல அவர் கேட்ட ஒரேயொரு ஃபைலைத்தான் எடுத்து வெச்சிருக்கேன். உர பேர ஊழல் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளோட காப்பீஸையும் அதுலே இணைச்சிருக்கேன்..."



மீரா குறுக்கிட்டுச் சொன்னாள்.

"இதெல்லாம்... எங்களுக்குத் தேவையில்லாத விஷயம்... அவர் குடுத்த பணத்தை உங்ககிட்டே குடுத்துட்டோம். நீங்க எதைக் கொடுத்தாலும் அதை அவர்கிட்டே கொண்டு போய் குடுத்துட வேண்டியது எங்க ட்யூட்டி..."

"நான் ஒரு கேள்வி கேட்டா, நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே?"

கல்பகா சிரித்தாள்.

"நீங்க என்ன கேக்கப் போறீங்கன்னு எனக்குத் தெரியும். தலைவர் எத்திராஜுலுக்கும் எங்களுக்கும் என்ன தொடர்புன்னு கேக்கப் போறீங்க... சரியா?"

"ஆமாம்!"

"திருவனந்தபுரத்துல, ஒரு பார்மாசூடிகல் கம்பெனியில் நாங்க ரெண்டு பேரும் ஒர்க் பண்றோம். எத்திராஜுலுவும் அந்தக் கம்பெனியில் ஒரு பார்ட்னர். அவரோட நிழலான காரியங்களுக்கு நாங்கதான் உதவுவோம். தமிழ்நாடு முதலமைச்சர் நல்லமுத்து மேல அவர் தரப் போகிற, ஊழல் புகார்களுக்கான ஆதாரங்களை சேகரிக்க வேண்டியது எங்க வேலை. இந்த மாதிரியான அந்தரங்க வேலைகளுக்கு அவர் தன்னோட கட்சிக்காரங்களை நம்பறதில்லை. எங்களைத்தான் நம்புவார். நீங்க அக்ரோ சர்வீஸ்ல பர்சேஸ் மானேஜரா இருக்கிற விஷயமும் - இன்னிக்கு கோயமுத்தூர்ல - ஹோட்டல் கனிஷ்காவில் தங்கப் போகிற விஷயமும், நேற்றைக்கு ராத்திரியே டெலிபோன்ல சொல்லி - இந்தக் காரியத்தைப் பண்ணச் சொன்னார்."

தமிழ்ச் செல்வன் சிரித்தார்.

"எத்திராஜுலுவின் அரசியல் அணுகுமுறை எனக்கு ரொம்பவே பிடிக்கும். வரப் போகிற எலக்ஷன்ல அவர் ஜெயிச்சு, சீஃப் மினிஸ்டரா வரணுங்கிறதுதான் என்னோட ஆசை. அந்த உர பேர ஊழல் ஒண்ணே போதும். நல்லமுத்துவும் அவரோட சகாக்களும் கூண்டோடு ஜெயிலுக்கு போயிடுவாங்க..." - சொன்ன தமிழ்ச் செல்வன் எழுந்து போய் சூட்கேஸைத் திறந்து - ஒர ஃபைலை எடுத்துக் கொண்டு வந்தார். கல்பகாவிடம் கொடுத்தபடியே கேட்டார்.

"நீங்க என்னோட ரூமுக்கு வந்ததை யாரும் பார்த்துடலையே?"

மீரா சிரித்தாள். "யாரும் பார்த்துடக் கூடாதேங்கிறதுக்காகத்தான்... இந்த நடு ஜாமத்துல வந்திருக்கோம்..."

"நீங்க எந்த ரூம்ல தங்கியிருக்கீங்க...?"

"மூன்னூத்தி ரெண்டு..."

"தேர்ட் ப்ளோர்?"

"ஆ மா..."

"என்னிக்கு மெட்ராஸ் போவீங்க?"

"தலைவர்கிட்டயிருந்து போன் வந்ததும்..."

கல்பகாவும் மீராவும் எழுந்தார்கள்.

"புறப்பட்டுட்டீங்களா?"

"ஆமா..."

"எத்திராஜுலு வேற ஏதாவது சொன்னாரா?"



மீரா, கல்பகாவைப் பார்த்தாள். "என்ன கல்பகா... தலைவர் ஏதாவது சொன்னாரா?"

"கடைசியா ஒண்ணைச் சொன்னாரே... மறந்துட்டியா?"

"என்ன சொன்னார்?" தமிழ்ச் செல்வன் ஆர்வமாய்க் குறுக்கிட்டுக் கேட்க - கல்பகா அவரை ஏறிட்டாள்.

"அவர் சொன்னதைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க..."

"ஃபைல் எங்க கைக்கு வந்ததும் - உங்களை கொன்னுடச் சொன்னார்."

## 4

"ரொய்ங்... ரொய்ங்..." - ஆம்புலன்ஸ் வேனும், போலீஸ் ஜீப்பும் அலறிக் கொண்டு நியூ ஆவடி டாங்க் ரோட்டுக்கு வருவதற்குள் - ஜெகத்ரட்சகன் ஸ்தல மரணம். சண்மகநேசனும் டிரைவரும் ரத்த வெள்ளத்தில் 'துடுக்... துடுக்' என்று ஸ்லோமோஷனில் வெட்டிக் கொண்டிருந்தார்கள்.

காரைச் சுற்றிலும் -

தூக்கம் கொட்டுப் போய் வந்த ஜனங்கள்.

"யோவ்... ஒத்துபா... போலீஸ் வந்தாச்சு..."

"அவங்க வந்து என்னாபா பண்ணப் போறாங்க?"

ஒரு இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் ஜீப்பினின்றும் குதித்து - காரை நோக்கி ஓடி வந்தார்கள். ஆம்புலன்ஸ் ஆர்டர்லிகள் ஸ்ட்ரெச்சரோடு பின் தொடர்ந்தார்கள்.

காரின் கதவைத் திறந்து - ரத்தம் ரத்தமாய் மூன்று பேரையும் அள்ளினார்கள்.

"க்விக்... ஆம்புலன்ஸுக்குக் கொண்டு போங்க..."

"போன் பண்ணினது யாரய்யா?"

ஒ"நான்தான் ஸார்..."

ஒரு இளைஞனின் முகம் முன்னாள் வந்தது.

"என்ன நடந்தது?"

"அதோ... அதான் ஸார்... என் குடிசை... குடிசைக்கு முன்னாடி, கயித்துக் கட்டிலைப் போட்டுகினு தூக்கம் வராமே பொரண்டுட்டு இருந்தேன்... இந்தக் கார் வந்து... இதே இடத்துல நின்னுது... கார் நின்னுட்டிருக்கிறப்பவே - ஒரு பைக் வேகமாக வந்துச்சு.... அதுவும் வந்து கார் பக்கத்துல நின்னுது. பைக்ல ரெண்டு பேர் இருந்தாங்க... ஒருத்தன் கையில மெஷின் கன்னு. 'ஏண்டா... எங்கத் தலைவரைப் பத்திப் பேச உனக்கு என்னடா யோக்யதை இருக்கு... எச்சப் பொறுக்கி நாயீன்னு சத்தம் போட்டுக்கிட்டே - டக டக டகன்னு சுட்டுட்டு, அதே வேகத்துல பைக்கை விரட்டிக்கிட்டுப் போயிட்டாங்க... துப்பாக்கி வெடிச்ச சத்தம் கேட்டு, தூங்கிட்டிருந்த அத்தினி ஜனமும் ஓடியாந்துட்டாங்க... நான் தான் மெயின் ரோட்டுக்கு ஓடிப் போயி... அன்வர் மருந்துக் கடையிலிருந்து உங்களுக்கு போன் பண்ணினேன்..."

"பைக்ல வந்தவங்க... எப்படியிருந்தாங்க?"

"இருட்டுல சரியா அடையாளம் தெரியலை ஸார்..."

"பைக்குன்னா... எந்த மாதிரியான பைக்? நெம்பர் போர்டு ஏதாவது கண்ணுல பட்டதா?"



"அதையெல்லாம் பார்க்க முடியலை... பத்து திலைந்து செகண்ட்ல எல்லாமே நடந்து டிஞ்சுடுச்சு... பைக்ல வந்தாங்க... நின்னாங்க... ரண்டு வார்த்தை திட்டினாங்க... அப்பாலே சுட்டுட்டு பாயிட்டே இருந்தாங்க..."

இன்ஸ்பெக்டர் பார்வையை காரின் பக்கமாய் ருப்பினார். ஆம்புலன்ஸ் வேன் மறுபடியும் ராய்ங்க்... ரொய்ங்க்' என்று அலறிக்கொண்டு பாக, சப்-இன்ஸ்பெக்டர் வந்தார்.

"என்ன ஜெயக்குமார்?"

"மினிஸ்டர்க்கும், டிரைவர்க்கும் மட்டும் லேசா யிர்த்துடிப்பு இருக்கு ஸார். பி. ஏ. ஸ்பாட் அவுட்ன்னு னைக்கிறேன்... அதை டாக்டர்தான் கன்பர்ம் ண்ணணும்..."

சப்-இன்ஸ்பெக்டர் ஆச்சர்யப்பட்டார். மெல்லிய ரலில் -

"செக்யூரிடி இல்லாமே மினிஸ்டர் எப்படி வெளியே ந்தார்?"

"அதைப் பின்னாடி என்கொயர் ண்ணிக்கலாம்... மொதல்ல இதைப் பார்க்கணும்... காலையாளிகள் பைக்ல வந்திருக்காங்க... அந்த த் கண்ணால பார்த்திருக்கான்."

சப்-இன்ஸ்பெக்டர் அந்த இளைஞனைத் ரும்பிப் பார்த்தார். அவன் கும்பிட்டான்.

"உம் பேரென்ன?"

"முகம்மத் யாசீன் ஸார்..."

"அவங்க சுடும்போது - பைக் எங்கே ன்னுட்டிருந்தது?"

"இதோ... இந்த இடத்துலதான் ஸார்..."

பைக் நின்ற இடத்தைக் காட்டினான் அவன்
இன்ஸ்பெக்டர் சொன்னார். "ஜெயக்குமார்... டய
பதிவுகள் ஏதாவது கிடைக்குதான்னு பாருங்க... நா
ஜி. ஹெச். போறேன்... ஹை அஃபீஷியல்ஸுக்
இந்நேரம் தகவல் போயி, வந்திருப்பாங்க... இந்
ராத்திரி நேரத்துல நல்ல லோல் கேஸ் வந்
மாட்டிகிச்சு..." தலையிலிருந்த தொப்பியைக் கழற்
– ஆசுவாசமாய் பெருமூச்சு விட்டுக்கொண்டே
ஜீப்பை நோக்கிப் போனார் இன்ஸ்பெக்டர்.

# 5

தமிழ்ச் செல்வனின் கண்கள் பயத்தில் சட்டென்
உறைந்து போக – படுக்கையில் உட்கார்ந்திருந்தவ
ஸ்லோமோஷனில், மெதுவாய் எழுந்தா
உதட்டினின்றும் வார்த்தைகள் பயமாக உதிர்ந்தன

"எ... என்ன... சொ... சொன்னே...?"

கல்பகா புன்னகைத்தாள். "நம்ம பாசமி
தலைவர், ஃபைல் கைக்கு வந்ததும் உங்களை
கொன்னுடச் சொன்னார்." அவ
சொல்லிக்கொண்டிருக்கும்போதே – மீரா த
தோளில் தொங்கின ஜோல்னா பையிலிருந்து
அந்த ரிவால்வரை எடுத்தாள்.

தமிழ்ச் செல்வன் பின்னுக்கு நகர்ந்தார்.

"எங்களுக்கும் உங்களை கொல்றதுக்
இஷ்டமேயில்லை தமிழ்ச் செல்வன்... ஆனா நம்
தலைவர்தான் பிடிவாதமா உங்க கணக்கைத் தீர்க்க
சொன்னார். நாங்களும் எவ்வளவோ சொல்லி



பார்த்தோம். அவர் கேட்கலை. அவரோட பயம் என்னான்னா... ஊழல் புகார்களை கவர்னர்கிட்டே குடுத்த பின்னாடி – உங்களை ஆளுங்கட்சிக் காரங்க... விலைக்கு வாங்கிடுவாங்களோன்னு பயப்படறார். அவரோட பயம் நியாயமானது தானே?" – மீரா சொல்லிக்கொண்டே ரிவால்வரை உயர்த்தினாள்.

தமிழ்ச் செல்வன் சுவரோடு சுவராய் ஒட்டிக்கொண்டு – ரிவால்வரை மலங்க மலங்கப் பார்க்க – மீரா அவரை நெருங்கினாள்.

ஐந்தடி தொலைவில் நின்று கொண்டு – ரிவால்வரின் ட்ரிக்கரை அழுத்த –

"ப்ஸ்ஸ்..." சோடா பாட்டிலை உடைத்த மாதிரி ஒரு சத்தம்.

வெண்மையான ஒரு கொத்துப் புகை கழன்று கொண்டே போய் – தமிழ்ச் செல்வனின் முகத்தைத் தாக்க –

அவர் பத்தே விநாடிகளில் – தலை சாய்த்து, கண் செருகி, முதுகால் சுவரைத் தேய்த்துக் கொண்டு – கால்களை நீட்டியபடி சரிந்தார்.

மீரா ரிவால்வரை ஜோல்னா பைக்குள் போட்டுக்கொண்டு – கல்பகாவைப் பார்த்தாள்.

"ஆரம்பிக்கலாமா?"

"ம்..."

கல்பகா ப்ரீப்கேஸைத் திறந்து – நோட்டுக் கற்றைகளுக்குக் கீழே ஒளித்து வைத்திருந்த – பாக்கெட் ட்ரான்சிஸ்டர் சைஸில் இருந்த – எலக்ட்ரோ

டிவைஸை எடுத்தாள். டிவைஸின் இரண் புறங்களிலும் சுருட்டி வைத்திருந்த மெல்லி ஒயர்களை, இரண்டடி நீளத்திற்கு நீட்டி - அத முனையில் இருந்த வில்லைகளை -கீழே சரிந் கிடந்த தமிழ்ச் செல்வனின் இரண்டு நெற்றி பக்கங்களிலும் அந்த வில்லைகளைப் பதித்தாள்.

எலக்ட்ரோ டிவைஸின் கீழ்ப் பாகத்தி கால்குலேட்டர் போன்ற ஃபெதர் டச் அமைப்ல லேசாய்த் தட்டினாள்.

'ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்ர்'

டிவைஸ் உறும ஆரம்பித்தது. அரை நிமி உறுமலுக்குப் பின் -

தமிழ்ச் செல்வனின் உடம்பு ஒரு முறை வெட்டி கொண்டது. பார்த்துக் கொண்டிருந்த மீர சொன்னாள். "போதும்... நிறைய மின்சாரத்தை தின்னுட்டான்..."

டிவைஸின் உறுமலை நிறுத்தினாள் கல்பக ப்ரீப்கேஸுக்குள் அதைப் பத்திரப்படுத்திவிட் நிமிர்வதற்குள் - மீரா தன் ஜோல்னா பையிலிருந் - ஸ்பேனரையும், ஸ்க்ரூ டிரைவரையும் எடுத் நீட்டினாள்.

"லைட்டை ஆஃப் பண்ணிட்டு... நீயும் என்கூ வா... மீரா... ஹீட்டரை கீழே இறக்கி வைக்கிறதுக் ரெண்டு பேர் வேணும். என் ஒருத்தியால மட்டு முடியாது."

மீரா ட்யூப் லைட்டை அணைத்து - அறையை இருட்டுக்குக் கொண்டு வந்தாள். ஜீரோ வாட்ஸ் படுக்கையறை விளக்கு மட்டும் - அறையில்



உயிரோடு இருக்க - குளியலறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள்.

கல்பகா க்ளவுஸை மாட்டிக் கொண்டு - ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டு - மேலே ஏறினாள். வாட்டர் ஹீட்டர்க்குப் பக்கத்திலிருந்த ஸ்விட்ச் போர்டின் ஸ்க்ரூ ஆணிகளைத் திருகி எடுத்து - போர்டை நிர்வாணமாக்க - உள்ளே - வரிசையாய் பீஸ் கட்டைகள் - அதில் இரண்டை உருவி மீராவிடம் கொடுத்தாள். பின் ஸ்பேனரை உபயோகப்படுத்தி - ஹீட்டரைத் தாங்கிப் பிடித்திருந்த ஹோல்டிங்குகளை விடுவித்து - அதைத் தளர்த்தி, கீழே கொண்டு வந்தாள். மீராவும் அதைத் தாங்கிப் பிடித்து - பாத்டப் அருகே இறக்கி வைத்தாள்.

"என்ன மீரா... போதுமா? இன்னும் ஏதாவது பண்ணணுமா?"

"போதும்... வா! தமிழ்ச் செல்வனைக் கொண்டாந்துடலாம்..."

இருவரும் பாத்ரூமை விட்டு வெளியே வந்து - தமிழ்ச் செல்வனின் உடல் கிடந்த இடத்திற்குப் போனார்கள்.

தமிழ்ச் செல்வனின் மின்சாரம் பாய்ந்த உடம்பு - ஆங்காங்கே கறுப்பு வாங்கியிருக்க - மீரா கல்பகாவிடம் சொன்னாள்.

"நிறைய கரெண்ட்டை சாப்டுட்டான் போலிருக்கு..."

"இதுக்கும் மினிமம் வோல்ட்ஸ்தான் அப்ளை பண்ணினேன்."

"நாளைக்குப் போலீஸ் வந்து பார்க்கும்போது -

கார்மேக வண்ணனா மாறிடுவான் போலிருக்கே. ம்... நீ... காலைப் பிடி... நான் தோளை பிடிக்கிறேன்..."

தூக்கிக் கொண்டு போய் -

பாத்ரூம் டப் அருகே மல்லாக்கக் கிடத்தினார்கள். அவருடைய இடது உள்ளங்கையை விரித்து ஸ்பேனரையும், வலது உள்ளங்கையை விரித்து ஸ்க்ரூ டிரைவரையும் திணித்தார்கள். விரல்களை மடித்து அவைகளை நன்றாய்ப் பிடித்துக் கொள்ளும்படி செய்துவிட்டு - நிமிர்ந்தார்கள்.

"எல்லாம் சரியா?"

இரண்டு பேரும் ஒரு தரம் சுற்றிப் பார்த்துக் கொண்டார்கள். கால் பதிவுகள் படிந்த இடத்தில் தண்ணீரை ஊற்றி அழித்துவிட்டு பாத்ரூமினின்றும் வெளியே வந்தார்கள்.

"மீரா..."

"ம்..."

"வேலை கச்சிதம்... கடைசியா உன்னோட வேலைதான் பாக்கியிருக்கு..."

"அதையும் முடிச்சுடறேன்..." - சொன்னவள் கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த இண்டர்காம் ரிஸீவரை நெருங்கி - கர்ச்சீப்பால் அதைப் போர்த்தி எடுத்தாள். ரிஸீவரின் வாயருகே உதட்டை ஒரு மாதிரியாய்க் குவித்து வைத்துக் கொண்டு - கரகரப்பான குரலில் பேசினாள்.

"திஸ்... ஈஸ்... ரூம் நெம்பர் பைவ் நாட் நைன்..."

"சொல்லுங்க ஸார்..." - ரிசப்ஷனிஸ்ட் பவ்யமாய்க் கேட்டாள்.



"குழாய்ல ஹாட் வாட்டர் வரலையே?"

"ஹாட் வாட்டர் உங்களுக்கு வேணுமா?"

"ஆமா... நாலு மணிக்கு நான் குளிச்சிட்டு கிளம்பணும்... ராத்திரியே சொல்லணும்ன்னு நினைச்சேன்... மறந்துட்டேன்... இப்போ... யூரின் பாஸ் பண்ணப் போகும்போது தான் ஞாபகத்துக்கு வந்தது. உடனே சொல்றேன்..."

"நாலு மணிக்குத்தானே நீங்க போகணும்?"

"ஆமா..."

"ஹீட்டர்ல ஏதாவது கோளாறு இருக்கலாம்... எலக்ட்ரீஷியனை அனுப்பி, சரி பண்ணிடறேன் ஸார்..."

"எனக்கும் ஹீட்டர் ரிப்பேர் தெரியும்... நான் வேணும்ன்னா என்ன கோளாறுன்னு பார்க்கட்டுமா?"

"வேண்டாம் ஸார்... நாலு மணிக்குள்ளே எலக்ட்ரீஷியனை அனுப்பி - ஹீட்டரை சரி பண்ணிடறோம் ஸார்... நீங்க எதையும் 'டச்' பண்ண வேண்டாம்..."

"ஓ.கே... மறக்காமே அனுப்பிடுங்க..." - மீரா ரிஸீவரை வைத்துவிட்டு, சிரிப்போடு திரும்பினாள்.

"ஓவர்... கிளம்பலாமா?"

அறைக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். வேகமாய் - ஆனால் சத்தம் வராமல் நடந்து இரண்டு ஃப்ளோர்களில் உயரமிழந்து - மூன்றாவது ஃப்ளோருக்கு வந்து, தங்களுடைய

அறைக்குள் நுழைந்தார்கள்.

கதவைச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு –

ஃபோம் படுக்கையில் விழுந்தார்கள்.

## 6

முதல்வர் நல்லமுத்து உயர்தர போலீஸ் அதிகாரிகளுக்கு மத்தியில் கோபமாய்த் தெரிந்தார். "நீங்க என்ன செய்வீங்களோ... ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. கொலையாளியை இன்னிக்கு சாயந்தரத்துக்குள்ளே நீங்க மடக்கியாகணும்..."

கமிஷனர் விறைப்பாக நின்று சொன்னார். "எல்லா முயற்சிகளையும் பண்ணிட்டிருக்கோம் ஸார்..."

"பைக்ல வந்த ரெண்டு பேருமே எதிர்க்கட்சிக் காரங்கன்னு க்ளியரா தெரிஞ்சுடுச்சு... போலீஸ் மும்முரமா இயங்கி, க்ளோஸ் ஃபாலோ அப் பண்ணினா... ஆளுங்களை மடக்கிடலாம்..."

"சந்தேகப்பட்ட நபர்களையெல்லாம் ஸ்டேஷனுக்கு கூட்டிப் போய் விசாரிச்சிட்டிருக்கோம் ஸார்..."

முதல்வரின் பி.ஏ. ராமலிங்கம் அறைக்குள் எட்டிப் பார்த்தார். நல்லமுத்து அவரை ஏறிட்டார்.

"என்ன ராமலிங்கம்?"

"ஸார்... ஹாஸ்பிடல்ல அட்மிட் பண்ணியிருந்த டிரைவர் குமார் செத்துட்டதா நியூஸ்..."

முதல்வர் அதிர்ச்சியோடு நிமிர்ந்தார்.

"சண்முகநேசன் எப்படியிருக்கார்ன்னு கேட்டீங்களா?"

"கேட்டேன் ஸார்... அவரும் இன்னமும் அபாயக் கட்டத்திலேயே இருக்கிறதா டாக்டர்ஸ் ரிப்போர்ட்..."

"டாக்டர்ஸ் ஹெட்டை என் கூட பேசச் சொல்லுங்க ராமலிங்கம்."

"எஸ்... ஸார்..."

ராமலிங்கம் டெலிபோனை நோக்கிப் போனார். முதல்வர் மறுபடியும் கமிஷனரிடம் திரும்பினார். "பார்த்தீங்களா... ரெண்டு உயிர் போயிடுச்சு... நீங்க குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தீவிரமான முயற்சிகளை எடுத்தே ஆகணும்..."

"ஸார்..."

"என்ன?"

"எதிர்க்கட்சித் தலைவர் எத்திராஜுலு இன்னிக்கு ஒரு அறிக்கையை விட்டிருக்கார். தன்னோட கட்சியைச் சேர்ந்த ஆட்களையெல்லாம் போலீஸார் அடக்குமுறையைப் பயன்படுத்தி மிரட்டினா, போராட்டம் வெடிக்கும்ன்னு சொல்லியிருக்கார்."

"அதெல்லாம் அவர் வழக்கமா சொல்ற வார்த்தைதான். போராட்டம்ங்கிறது அவருக்குக் குடிசைத் தொழில் மாதிரி. நீங்க அதைக் கண்டுக்காமே விசாரணை நடத்துங்க... எந்தப் போராட்டம் வந்தாலும் நான் பார்த்துக்கிறேன்..."

பி.ஏ. ராமலிங்கம் நீளமான ஒயரோடு – ரிஸீவரைக் கையில் பிடித்தபடி டெலிபோனைத் தூக்கி வந்தார்.

"ஸார்... தலைமை டாக்டர் லைன்ல காத்திட்டிருக்கார்."

ரிஸீவரை வாங்கிக் கொண்டு – "ஹலோ" என்றார்

"வணக்கம் ஸார்..."

"மினிஸ்டர்க்கு இப்போ எப்படியிருக்கு?"

"அபாயகரமான கட்டத்தை அவர் இன்னமும் தாண்டலை ஸார்..."

"உங்க தனிப்பட்ட அபிப்பிராயம் என்ன?"

"உயிர் பிழைக்க சான்ஸஸ் கம்மி... பட்... இப்போ இருக்கிற இந்த கோமா ஸ்டேஜ் கண்டிஷன் கண்டினியூ ஆனாலும் ஆச்சர்யப்படறதுக்கு இல்லை..."

"வெளிநாட்டு டாக்டர்ஸை வரவழைக்கலாமா?"

"நாட் நெசசரி... ஸார்..."

"டாக்டர்! மினிஸ்டர் சண்முகநேசனை... அட் என் காஸ்ட் நீங்க காப்பாத்தியே ஆகணும்... இந்தியாவில் இருக்கிற எந்த டாக்டர் உங்களுக்கு வேணும்? நான் வரவழைக்கத் தயாராயிருக்கேன்..."

"ஸாரி... ஸார்... எந்த டாக்டர் வந்தாலும், நாங்க இப்போ என்ன ட்ரீட்மெண்ட் குடுத்திட்டிருக்கோமோ... அதையேதான் அவங்களும் குடுக்கப் போறாங்க... அந்த ட்ரீட்மெண்ட்டைத்தான் குடுக்கணும்... வேற வழியில்லை..."

"நான் இப்போ ஹாஸ்பிடலுக்கு வரலாமா?"

"ஸாரி ஸார்... அடுத்த அரை மணி நேரத்துல இன்னொரு ஆபரேஷனை மேற்கொள்ளப் போறோம். அந்த ஆபரேஷன் முடிய – எப்படியும் மூணு மணி நேரம் ஆயிடலாம். நீங்க ஹாஸ்பிடலுக்கு மத்தியானத்துக்கு மேலே வரலாம்..."



"ஓ.கே... டாக்டர்! எனக்கு சண்முகநேசன் உயிரோடு வேணும்... எங்கக் கட்சிக்கும், இந்த ஆட்சிக்கும் உத்திரம் மாதிரியானவர் அவர். அவரை உங்க டாக்டர் குழு காப்பாத்திக் குடுத்துட்டா... அரசின் சார்பாகவும், என் தனிப்பட்ட சார்பாகவும் பரிசுகள் காத்திருக்கு..."

"மினிஸ்டரின் மதிப்பு வாய்ந்த உயிரைக் காப்பாத்தணும்ன்னு டாக்டர் குழுவும் மும்முரமா இறங்கிட்டிருக்கு ஸார்..."

"நன்றி. உங்களிடமிருந்து நல்ல செய்தியைத்தான் எதிர்பார்க்கிறேன்..." ரிஸீவரை வைத்துவிட்டு நிமிர்ந்த நல்லமுத்துவின் பார்வையில் – போலீஸ் சூப்பரிண்டெண்ட், கமிஷனரின் காதில் ஏதோ சொல்லிக்கொண்டிருப்பது பட்டது.

"என்ன விஷயம்?"

கமிஷனர் சுதாரிப்புக்கு வந்தார்.

"நத்திங் ஸார்... ஏதோ ஒரு சுவரொட்டி நம்ம பங்களா காம்பௌண்ட் பின் பக்க சுவரில் ஒட்டியிருக்காங்களாம்..."

முதல்வரின் புருவங்கள் உயர்ந்தன.

"சுவரொட்டியா? என்ன சுவரொட்டி?"

கமிஷனர் தயங்க – போலீஸ் சூப்ரிண்டெண்ட் எச்சில் விழுங்க – முதல்வரே முன்னால் நடந்தார். "வாங்க... பார்க்கலாம்!"

செக்யூரிட்டி ஆபீஸர்ஸ் கரை கட்டிய மாதிரி அவா கூடவே நெருக்கமாய் நடந்து வர – எல்லோரும் பங்களாவின் பின் பக்க காம்பௌண்ட் சுவர்க்கு வந்தார்கள். கேட்டைத் திறந்து – எட்டிப் பார்க்க –

சுவரொட்டி தெரிந்தது.

கொஞ்சம் பெரிய சுவரொட்டிதான். வெள்ளைப் பின்னணியில் கறுப்பு எழுத்துக்கள்.

எதிர்க்கட்சிகளின் மேல் அடக்குமுறையைக்
கட்டவிழ்த்து விடும்
சர்வாதிகாரி நல்லமுத்துவே!
விரைவில் நீயும் கொல்லப்படுவாய்!
உன் கல்லறைக்கு நாங்கள் தேதி
குறித்து விட்டோம்.

நல்லமுத்து அந்த சுவரொட்டியைப் படித்துவிட்டு புன்னகைத்தார். "எதிர்க்கட்சியின் தலைவர் எவ்வளவு சுறுசுறுப்பாயிருக்கார்? போலீஸ் தன்னுடைய விசாரணையை இன்னும் ஆரம்பிக்கவே இல்லை.. அதுக்குள்ளே போஸ்டரை அச்சிட்டு ஒட்ட ஆரம்பிச்சுட்டாங்க! கமிஷன்...!"

"ஸார்..."

கமிஷனர் முன்னால் வந்தார்.

"இந்த சுவரொட்டியை எந்த பிரிண்டர்ஸ் அச்சிட்டாங்க... யார் இதுக்குஆணி வேர்ங்கிறதை கண்டு பிடிக்க ஏற்பாடு பண்ணுங்க" - முதல்வ சொல்ல, கமிஷனர் தலையாட்டினார்.

## 7

ஹோட்டல் கனிஷ்காவின் ஐந்தாவது மாடி 509-வது அறையைப் போலீஸார் ஆக்ரமித்திருக் - ஹோட்டல் மானேஜரும், ரிசப்ஷனிஸ் இளைஞனும் முகங்கள் வியர்த்துப் போய் மின்சாரத்தின் உபயத்தினால் - நிறம் மாறி உயி



விட்டிருந்த தமிழ்ச் செல்வனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் அசோக் - அறையைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ரிசப்ஷனிஸ்ட் இளைஞனிடம் நெருங்கினார்.

"இந்த தமிழ்ச் செல்வன் என்ன போஸ்ட்ல இருந்தவர்?"

"அக்ரோ சர்வீஸ்ல பர்சேஸிங் மானேஜர்..."

"என்னிக்கு வந்து இவர் ரூம் எடுத்தார்?"

"நேத்துக் காலையில..."

"கூட யாராவது வந்தாங்களா?"

"இல்ல... ஸார்... இவர் மட்டும்தான் வந்தார்."

"வாட்டர் ஹீட்டர் ரிப்பேர்ன்னு போன் பண்ணும்போது எவ்வளவு மணி இருக்கும்?"

"ஒரு மணி..."

"நீங்க எலக்ட்ரீஷியனை அனுப்பும்போது நேரம் என்ன இருக்கும்?"

"மூணு மணி..."

நீல நிற யூனிபார்மில் அங்கே நின்றிருந்த எலக்ட்ரீஷியனை ஏறிட்டார் இன்ஸ்பெக்டர் அசோக்.

"உம் பேரென்ன?"

"சுகுமாரன் ஸார்..."

"நீ மூணு மணிக்கு வரும்போது இந்த ரூமோட கதவு திறந்திருந்ததா?"

"ஆமா ஸார்... இருந்தாலும் நான் உள்ளே நுழையலை... வெளியே நின்னபடியே கதவைத்

தட்டி, 'ஸார்... ஸார்'ன்னு குரல் கொடுத்தேன்.
உள்ளேயிருந்து எந்த சத்தமும் வராமே போக, எட்டிப்
பார்த்தேன். பாத்ரூம் கதவும் தொறந்த மாதிரி
இருந்தது. மறுபடியும் குரல் கொடுத்து பார்த்தேன்.
பதில் வராததினாலே மனசுக்குள்ளே சந்தேகம்
வந்து, பாத்ரூம் கதவைத் தொறந்தேன். ஸார் இந்த
மாதிரியான கோலத்துல கிடந்தாரு... உடனே
ரிசப்ஷனுக்கு போன் பண்ணி விஷயத்தை
சொன்னேன்..."

இன்ஸ்பெக்டர் ரிசப்ஷனிஸ்ட் இளைஞனிடம்
திரும்பினார். "ஹீட்டர் ரிப்பேர் எனக்குத் தெரியும்.
நான் ரிப்பேர் பார்க்கட்டுமான்னு கேட்டாரா தமிழ்
செல்வன்?"

"ஆமா... ஸார்..."

"அதுக்கு நீங்க என்ன பதில் சொன்னீங்க?"

"வேண்டாம் ஸார்... நாலு மணிக்குள்ளே
எலக்ட்ரீஷியனை அனுப்பி - ஹீட்டரை ச
பண்ணிடறோம்... நீங்க எதையும் 'டச்' பண்ண
வேண்டாம்ன்னு சொன்னேன். நா
சொன்னதையும் மீறி ரிப்பேர் பார்த்திருக்கார்... இ
ப்யூர்லி ஆக்ஸிடெண்ட் மாதிரிதான் ஸார்..."

"லெட்ஜர்ல தமிழ்ச் செல்வன் எந்த அட்ர
குடுத்திருக்கார்?"

"தன்னோட அக்ரோ சர்வீஸ் டிபார்ட்மெண்
அட்ரஸைத்தான் கொடுத்திருக்கார். அதாவது மது
டிவிஷன் அட்ரஸ்..."

"அந்த அட்ரஸுக்கு இந்த டெத் ந்யூஸை கன்
பண்ணிட்டீங்களா?"



"பண்ணிட்டோம் ஸார்..."

பாத்ரூமினின்றும் வெளிப்பட்டார் சப்-இன்ஸ்பெக்டர் தீனதயாளன். "ஸார்..."

அசோக் திரும்பினார். "என்ன தீனதயாளன்?"

"பாடியை போஸ்ட் மார்ட்டம் கொண்டு போயிடலாமா ஸார்?"

"ப்ளீஸ்... டூ இட்..."

தீனதயாளன் திரும்பி, கான்ஸ்டபிள்களுக்கு கண்ணைக் காட்ட - அவர்கள் வெள்ளை விரிப்பை தமிழ்ச் செல்வனின் மேல் போர்த்தி - ஸ்ட்ரெச்சர்க்குக் கொண்டு போனார்கள்.

ஹோட்டல் மானேஜர், அசோக்கிடம் கெஞ்சினார்.

"ஸார்... ந்யூஸை பிரஸ்ஸுக்குக் கொடுக்கும்போது - ஹோட்டல் பேர் வராமே பார்த்துக்குங்க..."

"முயற்சி பண்றோம்... இது ஒரு அரசாங்க அதிகாரியின்" மரணம். இதை நெக்லெட் பண்ணி ந்யூஸ் போட முடியாது..."

தமிழ்ச் செல்வன் மார்ச்சுவரி வேனுக்குப் புறப்பட்டுப் போக - எல்லோரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள். வராந்தாவில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கும்பலின் மத்தியில் - கல்பகாவும் மீராவும் தெரிந்தார்கள். உயர்த்திப் போட்ட கொண்டைகளோடு சல்வார் கம்மீஸ்களில் புகுந்திருந்தார்கள்.

போலீஸை விட்டுத் தள்ளி நடந்த - ரிசப்ஷனிஸ்ட் இளைஞனுக்குப் பின்னாலே போய் - "எக்ஸ்க்யூஸ் மீ" என்றார்கள்.

"எஸ்..."

கல்பகா அப்பாவித்தனமாய்க் கேட்டாள்.

"செத்தது யாரு?"

"தமிழ்ச் செல்வன்..."

"தற்கொலையா? மர்டரா?"

"ரெண்டுமில்லை... இது ஒரு விபத்து... ஹீட்ட
ரிப்பேர் பார்க்கப் போய் உயிரை விட்டிருக்கார்..."

"போலீஸ் என்ன சொல்றாங்க?"

"அவங்களும் விபத்துங்கிற முடிவுக்குத்தா
வந்திருக்காங்க..." சொல்லிவிட்டு அவன் வேகமா
நடந்து போய், ஹோட்டல் மானேஜரோடு சேர்ந்
கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

அகலமான புன்னகையோடு - கல்பகாவு
மீராவும் ஒருத்தரையொருத்தர் பார்த்து
கொண்டார்கள். வராந்தாவில் கூட்டம் கரைந்ததும்
மாடிப் படிகளில் இறங்கினார்கள்.

"போலீஸுக்கு இது மர்டர்ன்னு சந்தேக
வந்துடாதே...?" மீரா கேட்டாள்.

"எப்படி வரும்? திட்டத்தை நம்ம 'எஜமா
சொல்லிக் குடுத்த மாதிரி, துல்லியமா போட்
நிறைவேத்தியிருக்கோம். போலீஸ் இதை ஒ
ஆக்ஸிடெண்ட் என்கிற கோணத்துலதான் ப்
பண்ணப் போறாங்க..."

ரிசப்ஷன் ஹாலுக்கு வந்தார்கள்.

"எஜமானுக்கு ட்ரங்கால் போட்டு இந்
சந்தோஷமான செய்தியைச் சொல்லிடலாமா?"



"ஹோட்டல்லயிருந்து ட்ரங்கால் போட வேண்டாம் மீரா. வெளியே போய் ஏதாவது ஒரு டெலிகிராபிக் ஆபீஸிலிருந்து எஸ்.டி.டி. போட்டு பேசுவோம்..."

ரிசப்ஷனைக் கடந்து ஹோட்டலுக்கு வெளியே வந்தார்கள்.

காம்பௌண்ட் கேட் ஓரமாய் வரிசையாய் நின்றிருந்த ஆட்டோக்களில் ஒன்றைப் பொறுக்கிக் கொண்டு கிளம்பினார்கள். மெக்ரிகர் ரோட்டின் கார்னரில் இருந்த டெலிகிராபிக் ஆபீஸிற்கு முன்னால் ஆட்டோவை நிறுத்தி இறங்கிக் கொண்டார்கள்.

"ஆட்டோவை அனுப்பிடலாமா? வெயிட்டிங்கில் இருக்கட்டமா?"

"அனுப்பிடலாம்... எஸ்.டி.டி. கால் கிடைக்க ஒரு வேளை லேட்டானா, தண்டத்துக்கு வெயிட்டிங் சார்ஜ் தரணும்..."

"அதுவும் சரிதான்..."

ஆட்டோ டிரைவருக்குப் பணம் கொடுத்து அனுப்பிவிட்டு டெலிகிராபிக் ஆபீஸுக்குள் நுழைந்தார்கள். எஸ்.டி.டி. பாரத்தை வாங்கி, டெலிபோன் எண்ணையும், ஊரையும் குறித்து, டெபாஸிட் நூறு ரூபாய் செலுத்தி, அங்கிருந்த கண்ணாடி கூண்டுக்குள் புகுந்து கதவைச் சாத்திக்கொண்டு ரிஸீவரை எடுத்தார்கள்.

எஸ்.டி.டி. கோட் நெம்பரையும் டெலிபோன் எண்ணையும் விரல்கள் நோக சுழற்றிச் சுழற்றி பத்து நிமிஷங்களுக்குப் பின் - இணைப்பு கிடைத்ததும் - பதட்டமானார்கள்.

“கல்பகா... நீ பேசுடி...”

“வேண்டாம்... நீயே பேசு...”

ரிஸீவரில் – மீரா குரல் கொடுத்தாள்.

“ஸார்... நான் மீரா...”

“எங்கிருந்து பேசறே...?”

“ஒரு டெலிகிராபிக் ஆபீஸிலிருந்து...”

“சரி... என்னாச்சு...?”

“பிரமோஷன் ஆர்டர் டைப்பாயிடுச்சு ஸார்.”

“குட்... உன்னோட போன் காலைத்தான் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்துட்டிருந்தேன். அங்கே நாங்களும் ரெண்டு பேர்க்குப் பிரமோஷன் ஆர்டர் குடுத்துட்டோம். முக்கியமான இன்னொருத்தர் ஆர்டரை வாங்கிக்க மாட்டேன்னு பிடிவாதம் பண்ணிட்டிருக்கார். அவரையும் சவுடி சீக்கிரம் வாங்க வெச்சுடுவோம்...”

“நானும் கல்பகாவும் என்னிக்கு ஸார் மெட்ரா வர்றது.”

“இப்பவே ரூமைக் காலி பண்ணிட்டு வாணியம்பாடி போயிடுங்க. அங்கே உங்களுக்குக் குடுக்கப்பட்டிருக்கிற வேலையை முடிச்சுட்டு மெட்ராஸ் வந்துடுங்க...”

“சரி ஸார்... நாளைக்கு ராத்திரி வாணியம்பாடியிலிருந்து புறப்பட்டு, மறுநாள் காலையில பத்து மணிக்கு வர்றோம்...”

“வாங்க...”

“ரிஸீவரை வெச்சுடட்டுமா ஸார்...?”



“ம்... வெச்சுடு...”

ரிஸீவரை அமர்த்தினாள் மீரா.

# 8

முதலமைச்சர் நல்லமுத்து கவலையாய் பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டிருக்க – எதிரே கமிஷனர் இறுக்கமான முகத்தோடு நின்றிருந்தார். நல்லமுத்து கேட்டார், எரிச்சலாய்...

“அப்புறம் என்னதான் பண்ணப் போறீங்க?”

“எதிர்க்கட்சிக்காரங்களைத் தகுந்த ஆதாரமில்லாமே கைது பண்ண முடியாது ஸார்... மினிஸ்டர் சண்முகநேசனைச் சுட்டது யார்ன்னு குறிப்பா கண்டுபிடிக்கிற வரைக்கும், நாம எந்த ஸ்டெப்ஸும் எடுக்க முடியாது...”

“சந்தேகத்தின் பேர்ல நாலைஞ்சு எதிர்க்கட்சி ஆட்களைக் கைது பண்ண முடியாதா?”

“பண்ணினா... வீணா பிரச்னைகள் வரும் ஸார்.”

“என்ன பிரச்னை வரும்...?”

“ஆர்ப்பாட்டம் பண்ணுவாங்க ஸார்...”

“பண்ணட்டுமே... ஆர்ப்பாட்டம் நடந்து நாலைஞ்சு இடத்துல வன்முறை சம்பவங்கள் தலைதூக்கினா, அதை சாக்கா வெச்சு, எதிர்க்கட்சியைச் சேர்ந்த முக்கியமான புள்ளிகளை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்துடலாமே...”

“ஒரு ரெண்டு நாள் டயம் கொடுங்க ஸார்... உண்மையான குற்றவாளிகளை அமுக்கிடறேன்...”